*Journal of Social Review, 09(1), June 2022*
*Department of Social Sciences*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka.*

# இலங்கையின் ஐதீக கதைமரபுகளில் விஜயன் மற்றும் உக்கிரசிங்கன் மாருதப்புரவீகவல்லி கதைகள் - ஓர் ஒப்பீட்டாய்வு

**திருமதி. சிவரூபி சயிதரன்**
வரலாற்றுத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
Correspondence: sivaruby17@gmail.com

**ஆய்வு சுருக்கம்**

*எழுத்துக்களின் உருவாக்கத்திற்கு முன்னரான வரலாற்றுக்கு முற்பட்டகால வரலாற்றினை விளக்குவதில் ஐதீக கதைமரபுகளுக்கு முக்கிய பங்குண்டு. இவை ஒரு பிரதேசத்தின் அல்லது நாட்டின் வழமைகளை அல்லது தொன்மையை விளக்குவதன் பொருட்டு எடுத்துரைக்கப்படுவதால் அப்பிரதேசத்திற்குரிய தொட்டுணர முடியாத மரபுரிமைச் சொத்துக்களாகவும் விளங்குகின்றன. ஆசியாவின் தொன்மையான அரச உருவாக்கமானது பெரும்பாலும் ஐதீககதை மரபுகளுடன் தொடர்ப்புபடுத்தப்பட்டிருப்பது பொதுவானதொரு பண்பாக காணப்பட்டிருந்தது. இப்பண்பினை கௌண்டின்யர், விஜயன், அர்ச்சுனன் கதைமரபுகளுக்கிடையிலான ஒற்றுமைகளுடாக காணமுடிகின்றது. இக்கதை மரபுகள் மிகநீண்டதொரு தொன்மையான வரலாற்றினை விளக்குவதன் பொருட்டு பல வடிவங்களிலும், இலக்கிய காவியப்பண்பிற்குகேற்ப மாற்றமடைந்த வகையிலும், காலவரன்முறையற்ற வகையிலும் வரலாற்று இலக்கியங்களில் இடம்பிடித்தன. இதனால் ஐதீககதைமரபுகளில் நம்பகத்தன்மையை எதிர்பார்க்கமுடியாதெனிலும் அவற்றிலும் ஒரு சில தொன்மைச் சான்றுகளிருப்பதனை மறுப்பதற்கில்லை. இதனை பிற்கால தொல்லியல் ஆய்வுகளுடன் ஐதீககதைமரபுகளை ஒப்பிட்டு ஆராய்வதனூடாகவே அறிந்துகொள்ளலாம். இந்தவகையில் தமிழ் மக்களிடையே செல்வாக்கு பெற்றிருக்கின்ற உக்கிரசிங்கமன்னன், மாருதப்புரவீகவல்லி பற்றிய வரலாற்றுக் கதைகளை இலங்கை வரலாறு பற்றி எழுந்த விஜயனது வரலாற்றுக் கதையுடன் ஒப்பிட்டு, வடஇலங்கை அரசமரபின் தோற்றம் பற்றிய ஆய்வில் அக்கதையின் வகிபாகத்தை மதிப்பீடு செய்வதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாக அமைகின்றது. இவ்வாய்வின் இன்னொரு நோக்கமாக விஜயனது வரலாற்றுக்கதை மற்றும் உக்கிரசிங்கமன்னன், மாருதப்புரவீகவல்லி கதை ஆகியவற்றில் வரும் வரலாற்றுச் சம்பவங்களினை தொல்லியல் ஆதாரங்களுடன் ஒப்பிட்டு, கதையின் உண்மைத் தன்மையை மீளாய்வு செய்வதாகவும் அமைகின்றது. இவ்வாய்வு நோக்கங்களை நிறைவுசெய்வதன் பொருட்டு ஆய்வுடன் தொடர்புடைய வரலாற்றுக் கதைகளினை உள்ளடக்கியுள்ள மூலநூல்களிலிருந்தும், இம்மூலநூல்களினை அடிப்படையாகக் கொண்டெழுந்த இரண்டாம்தர நூல்களிருந்தும் தரவுகள் பெறப்பட்டிருப்பதுடன், இரண்டாம்தர தரவுகள் தொல்லியல் களப்பயணங்கள், நேரடி நேர்காணல் ஊடாகவும் சேகரிக்கப்பட்டுள்ளன. முதல்தர தரவுகள் இரண்டாம்தர தரவுகளுடன் ஒப்பிட்டு ஆராயப்பட்டு அதனை பகுப்பாய்வு செய்வதாகவே இவ்வாய்வு அமைகின்றது.*

**திறவுச்சொற்கள்:** உக்கிரசிங்கன், ஐதீக கதைமரபுகள், மாருதப்புரவீகவல்லி, விஜயமன்னன்

 ISSN (Print): 2448-9204

*Journal of Social Review, 09(1), June 2022*
*Department of Social Sciences*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka.*

## அறிமுகம்

தென்கிழக்காசியா, தென்னிந்தியா மற்றும் இலங்கை ஆகிய இடங்களில் இடம்பெற்ற சமஸ்கிருதமயமாக்கத்தின் காரணமாக இங்கிருந்த ஆட்சியாளர்களின் குலத்தோன்றல்கள்களை வடஇந்திய வம்சங்களுடன் இணைக்கும் வகையிலான புனைகதைகள் தோற்றம் பெற்றன. அத்துடன் இந்நாடுகளின் தொன்மையான அரச உருவாக்கமானது பெரும்பாலும் வரலாற்றுக் கதைகளுடன் தொடர்ப்புபடுத்தப்பட்டிருப்பது பொதுவானதொரு பண்பாக காணப்படுகின்றது. கௌண்டின்யர், விஜயன், அர்ச்சுனன் கதை மரபுகளுக்கிடையிலான ஒற்றுமைகளுடாக இப்பண்பினை காணமுடிகின்றது. ஆதிகால, இடைக்கால வரலாறு பற்றிய ஆய்வில் ஐதீகங்கள், செவிவழிக்கதைகள், புராண, இதிகாச மரபுகளை அடிப்படையாகக் கொண்ட வரலாற்றுக் கதைகளுக்கு முக்கிய பங்குண்டு. இவற்றில் புனைகதைகள், மிகைப்படுத்தல்கள், இடைச்செருகல்களுடன் கூடிய வரலாற்றுச் சம்பவங்கள் இடம்பெற்றிருந்தாலும், அவை மக்களது வாழ்வியலிலும், பிரதேசம், இனம் பற்றிய வரலாற்று நம்பிக்கையிலும் இரண்டறக் கலந்து விடுவதால் அவற்றைத் தொட்டுணர முடியாத அம்சங்களாகப் பார்க்கப்படுகிறது. இதனால்தான் யுனஸ்கோ போன்ற நிறுவனங்கள் உலக நாடுகளில் காணப்படும் தொட்டுணர முடியாத மரபுரிமை அம்சங்களைக் கண்டறிந்து, ஆவணப்படுத்துவதில் அதிக அக்கறை காட்டி வருகின்றன. வரலாற்றுக்காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்களில் கூட அவ்விலக்கியங்கள் தோற்றம் பெறுவதற்கு முற்பட்ட வரலாறுகள் ஐதீக, செவிவழி, நாடோடி கதைமரபுகளாக அவற்றில் இடம்பிடித்திருந்தன. வரலாற்று இலக்கியங்களில் காணப்படும் வரலாற்றுக் கதைகளில் நம்பமுடியாத வரலாற்றுச் செய்திகள் பல காணப்பட்டாலும் புராதன அரச உருவாக்கம், நாகரிக உருவாக்கம், புராதன வரலாற்று மையங்களை கண்டறிவதற்கு அவை துணையாக இருந்து வருவதற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. உக்கிரசிங்கமன்னன் மாருதப்புரவீகவல்லி கதை மகாவம்சம் என்ற பாளி இலக்கியத்தில் கூறப்படும் விஜயமன்னன் குவேனி கதையின் மாற்று வடிவமாகக் காணப்படுவதனை, விஜயமன்னன் கதையிலே வருகின்ற பாட்டனாகிய சிங்கமே தமிழிழக்கியங்களில் உக்கிரசிங்கனாகவும், பாட்டியாகிய கலிங்கநாட்டுத் தொடர்புடைய வங்கத்து இளவரசி மாருதப்புரவீகவல்லியாகவும், சிங்கத்திற்கும் இளவரசிக்கும் பிறந்த பிள்ளைகளான சிங்கபாகு, சீகவல்லியே உக்கிரசிங்கன் மாருதப்புரவீகவல்லியின் பிள்ளைகளான நரசிங்கராசன் (சிங்கன், செயதுங்கவீரபோகவரராச சிங்கன், சிங்ககுமாரன்) சண்பகாவதியாகவும் உருமாற்றப்பட்டுள்ளதாக கருதமுடியும். இவ்ஐதீகங்கள் கிழக்கிலங்கையிலும் அப்பிரதேசத்திற்கு ஏற்றவாறு மாற்று வடிவம் பெற்றுள்ளதனையும் அவதானிக்கமுடிகின்றது. விஜயமன்னன் வரலாற்றுக்கதையில் மன்னார் மாவட்ட கரையோரப்பிரதேசம் (தம்பபண்ணி, மாதீத்த) வரலாற்றுதயகாலப் பண்பாட்டில் பெற்ற முக்கியத்துவம், அதன் அமைவிடச் சிறப்பு காரணமாக நாகரிக உருவாக்கத்தில் பெற்ற முக்கியத்துவம், அரசஉருவாக்கம், தென்னிந்தியாவுடான தொடர்புகள், நாட்டின்


ISSN (Print): 2448-9204

உட்பகுதிகளுக்கு பண்பாட்டினை பரவலடையச் செய்தல் போன்ற அம்சங்களை அடிப்படையாகக் கொண்ட வரலாறுகளே ஐதீகமாக மாற்றமடைந்துள்ளதெனலாம். அதேபோன்று உக்கிரசிங்கமன்னன் மாருதப்புரவீகவல்லி கதையும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களின் தொன்மையான நாகரிக உருவாக்கம், தென்னிந்தியச் தொடர்புகள், அரச மரபின் தொன்மை, தொன்மையான இடங்கள் என்பவற்றிலான வரலாற்றினை இணைத்து ஐதீகமாக மாற்றமடைந்துள்ளதனைக் காணமுடிகின்றது. குறிப்பாக தம்பபண்ணி – மாதீத்த, கதிரைமலை, கீரிமலை, மாவிட்டபுரம், பெருநிலப்பரப்பு ஆகிய இடங்களில் இடம்பெற்ற புராதன நாகரிக உருவாக்கம், தம்பபண்ணி – மாதீத்த, மற்றும் கதிரமலை என்பவற்றை மையமாகக் கொண்ட அரசஉருவாக்கம், மாதீத்த, ஐம்புகோளப்பட்டினம் - காங்கேசன்துறை போன்ற இயற்கைத் துறைமுகங்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து பெற்ற செல்வாக்கு என்பன எடுத்துக்காட்டப்படுகின்றன. ஏனைய இடங்களில் முறையான தொல்லியல் ஆய்வுகள் இடம்பெறாத போதும், மாதோட்டம், கந்தரோடையின் தொல்லியல் ஆய்வுகளின் முடிவுகள் இதனை உறுதிப்படுத்த உதவுகின்றதெனலாம். அந்தவகையில் இலங்கையில் ஏற்பட்ட அரசஉருவாக்கம், நாகரிக வளர்ச்சி, அதன் தொன்மை, தென்னிந்தியத் தொடர்புகள் பற்றி அறிந்து கொள்வதில் விஜயமன்னன் - உக்கிரசிங்க மன்னன் மாருதப்புரவீகவல்லி வரலாற்றுக்கதைகளுக்கும் முக்கிய பங்குண்டு.

கி.பி 5 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுதப்பட்டதாக கருதப்படும் மகாவம்சம் இலங்கையின் நாகரிகஉருவாக்கம், அரசஉருவாக்கத்தினை வடஇந்தியாவிலிருந்து வந்த விஜயன் கதையுடனேயே (வருகையுடனேயே) தொடர்புபடுத்துகின்றது. அதேபோன்று பிற்பட்ட காலத்தில் எழுந்த தமிழிலக்கியங்களான மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாணவைபவமாலை (கி.பி 18 ஆம் நூற்றாண்டு), முத்துக்கவிராசரின் கைலாயமாலை (கி.பி 16 ஆம் நூற்றாண்டு), வையாபுரிஐயரினால் எழுதப்பட்ட வையாபாடல் (கி.பி 15ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி 16 ஆம் நூற்றாண்டுகும் இடைப்பட்ட காலத்தில்) கோணோசலபுராணம், கோணேசர்கல்வெட்டு போன்ற தமிழிலக்கியங்களில் விஜயன், உக்கிரசிங்கன், மாருதப்புரவீகவல்லி கதைகளுடாக வட, கிழக்கு இலங்கையின் தொன்மையான நாகரிக உருவாக்கம், அரச உருவாக்கம், அதன் தொடர்ச்சியானதன்மை, தென்னிந்தியத் தொடர்புகள் என்பன எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இவ்வம்சங்களினை இரண்டு பிரிவுகளாக தமிழிலக்கியங்களில் பார்க்கமுடிகின்றது. ஒன்று "இற்றைக்கு 2400 வருடங்களுக்கு முன் ….என ஆரம்பிக்கும் விஜயன் தலமையிலான கதிரமலை அரசஉருவாக்கம் (யாழ்ப்பாணவைபமாலை) பற்றிய செய்தி, இரண்டாவது உக்கிரசிங்கன், மாருதப்புரவல்லி கதையூடாக கூறப்படும் செய்திகள். தமிழிலக்கியங்களிடையேயும் உக்கிரசிங்கன் மாருதப்புரவீகவல்லி கதையானது வேறுபட்ட கதைவடிவங்களாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளதனை அவதானிக்க முடிகின்றது. பொதுவாக விஜயன், உக்கிரசிங்கன் கதைகள் வேறுபட்ட நிகழ்வுகளை மையப்படுத்திய வகையில் அவற்றுக்கிடையே குறைந்தது 1300 ஆண்டுகால இடைவெளியினை கொண்டிருக்கின்றன. எனினும் நீண்டகால இடைவெளியினை கொண்டிருந்தாலும் அவைகளுக்கிடையில் பொதுவான ஒற்றுமைத்தன்மையிருப்பதனை அவதானிக்கமுடிகின்றது.


ISSN (Print): 2448-9204

## ஆய்வின் நோக்கங்கள்

இலங்கையின் ஐதீக கதைமரபுகளில் விஜயன் மற்றும் உக்கிரசிங்கன் மாருதப்புரவீகவல்லி கதைகள் - ஓர் ஒப்பீட்டாய்வு என்ற ஆய்வின் நோக்கங்களாக, வடக்கு, கிழக்கு மக்களிடையே செல்வாக்கு பெற்றிருக்கின்ற உக்கிரசிங்கமன்னன், மாருதப்புரவீகவல்லி பற்றிய வரலாற்றுக் கதைகளை இலங்கை வரலாறு பற்றி எழுந்த விஜயனது வரலாற்றுக் கதையுடன் ஒப்பிட்டு வடஇலங்கை அரசமரபின் தோற்றம் பற்றிய ஆய்வில் அக்கதையின் வகிபாகத்தை மதிப்பீடு செய்வதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாக அமைகின்றது. இவ்வாய்வின் இன்னொரு நோக்கமாக விஜயன் வரலாற்றுக்கதை மற்றும் உக்கிரசிங்கமன்னன், மாருதப்புரவீகவல்லி கதை ஆகியவற்றில் வரும் வரலாற்றுச் சம்பவங்களினை தொல்லியல் ஆதாரங்களுடன் ஒப்பிட்டு கதையின் உண்மைத் தன்மையை மீளாய்வு செய்வதாகவும் அமைகின்றது.

## இலக்கிய மீளாய்வு

இலங்கையின் முக்கிய வரலாற்றுக்கதைகளான விஜயன், குவோனி கதை மற்றும் உக்கிரசிங்கன், மாருதப்புரவீகவல்லி கதை பற்றிய மூலநூல்கள் மற்றும் இரண்டாம்தர நூல்கள் என்பன இவ்வாய்விற்குரிய இலக்கிய மீளாய்வில் உள்ளடங்குகின்றன. மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ள விஜயன் கதை பற்றி நோக்கும் போது, "இந்தியாவின் வங்க நாட்டை ஆட்சிசெய்த மன்னன் ஒருவனுக்கு ஓர் அழகில் சிறந்த கண்டோர் விரும்பத்தக்க மகள் இருந்தாள். சுதந்திர வாழ்க்கையில் விருப்புடையவளாக இருந்த இவள் ஒருநாள் வீட்டைவிட்டு வெளியேறி மகத நாட்டுக்குச் சென்று வணிககூட்டமொன்றுடன் சேர்ந்து பிரயாணம் செய்தபோது வழியிலே சிங்கம் ஒன்று அக்கூட்டத்தினரைத் தாக்கி வங்கநாட்டு இளவரசியைத் தனது குகைக்குத் தூக்கிச் சென்று, அவளுடன் கூடிவாழ்ந்தது. சிங்கத்திற்கும் இளவரசிக்கும் ஒரு மகனும், மகளும் பிறந்தனர். மகனுடைய கைகளும் பாதங்களும் சிங்கத்தின் பாதங்களைப் போன்று இருந்ததினால் அவனுக்கு சிங்கபாகு (ஸீஹபாஹு) எனப் பெயரிட்டனர். சிங்கபாகு இளம்பிராயம் அடைந்த பின் தனது தாயையும், சகோதரியையும் குகையிலிருந்து கூட்டிச் சென்று வங்கநாட்டை அடைந்தான். அங்கு வங்க நாட்டு மன்னனின் மருமகனாகிய வங்கத்துத் தளபதியின் பாதுகாப்பில் வாழ்ந்தனர். அவ்வாறு வாழ்ந்த காலத்திலே சிங்கபாகுவின் தந்தையாகிய சிங்கம் எல்லைப்புற வாசிகளுக்குப் பெரும் துன்பத்தை விளைவித்தது. சிங்கத்தை எவராலும் கொல்ல முடியாது போகவே சிங்கபாகு அதனைக் கொன்றெழித்தான். இதன்பின் சிங்கபாகுவுக்கு வங்கத்தின் அரசுரிமை கொடுக்கப்பட்ட போதும் அவன் வங்கத்தில் ஆட்சி நடத்தாது, தான் பிறந்த காட்டிற்குச் சென்று சிங்கபுரம் (ஸீஹபுர) என்ற நகரத்தை அமைத்து அங்கு தன் தங்கையை மணமுடித்து ஆட்சி நடத்தினான். அவனுடைய மூத்த மகனாகிய விஜயன் என்பவன் நாட்டிலே ஒரு துட்டனாகப் பெயர் பெற்றதனால் தந்தையினால் நாடுகடத்தப்பட்டான். நாடுகடத்தப்பட்ட விஜயன் தன்சகாக்களுடன் இலங்கையை

 ISSN (Print): 2448-9204

அடைந்து முதலாவது சிங்கள மன்னனாக சிங்கள இராச்சியத்தைத் தோற்றுவித்து ஆட்சிநடாத்தினான்" என்பது மகாவம்சத்தில் கூறப்பட்ட கதையாகும் (மகாவம்சம், 1950). அதாவது இலங்கையினுடைய நாகரிக உருவாக்கமானது விஜயன் வருகையுடன் மகாவம்சத்தில் கூறப்படுகின்றது. விஜயன் பற்றிய ஐதீகமானது 'சீகள' என வழக்கிலிருந்த ஈழநாட்டுப் பெயருக்கு கொடுக்கப்பட்ட விளக்கமான ஐதீகமாகும் எனவும், இக்கதை ஒரு கட்டுக்கதையென்றும் மெண்டிஸ் போன்ற அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர் (Mendis, 1965).

உக்கிரசிங்கன் மாருதப்புரவீகவல்லி வரலாற்றுக்கதையானது ஆறு முக்கியமான வரலாற்றேடுகளான யாழ்ப்பாண வைபவமாலை, மட்டக்களப்பு மான்மியம், திரிகோணாசல புராணம், கோணேசர் கல்வெட்டு, வையாபாடல், கயிலாயமாலை போன்றவற்றில் வேறுபட்ட வடிவங்களில் இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாண வைபவமாலையில் இக்கதையானது, "விஜயனுடைய சகோதரனின் வழித்தோன்றலாகிய உக்கிரசிங்கனுக்கு சிங்கமுகமும் மனித உடலும் இருந்தன. இவன் வடஇந்தியாவிலிருந்து சக ஆண்டு 717 இல் (கி.பி 795) படைகொண்டு வந்து இலங்கைத்தீவின் ஒரு பகுதியைக் கைப்பற்றி ஆண்டான். அவனுடைய ஆட்சிக்காலத்தில் மாருதப்பிரவல்லி எனும் சோழ குமாரத்தி யாத்திரை மேற்கொண்டு இலங்கைக்கு வந்தாள். குதிரை முகத்தைப் பெற்றிருந்த அவளுக்கு ஓர் அபூர்வ நோய் ஏற்பட்டிருந்தது. இலங்கையில் முனிவர் ஒருவர் அவளுக்குக் கொடுத்த அறிவுரையை ஏற்று அவள் கீரிமலைத் தீர்த்தத்தில் நீராடியதும் அவளுடைய நோயும் மாறிக் குதிரைமுகமும் மனிதமுகமாகியது. அதன் பின் சிலநாட்கள் அங்கு தங்கிக் கீரிமலைக் கோயிலுக்குத் திருப்பணி செய்வதிலே ஈடுபட்டாள். அப்படி இருந்த போது ஒருநாள் இரவு உக்கிரசிங்கன் அவளுடைய பாளையத்திற்குள் நுழைந்து அவளைத் தூக்கிச் சென்று மணமுடித்துச் செங்கடகநகரியிலிருந்து ஆட்சி நடத்தினான். இவர்களுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இரட்டைப் பிள்ளைகளாகப் பிறந்தனர். சிங்கத்தின் வாலை உடையவனாகக் காணப்பட்ட மகனுக்கு நரசிங்கராசன் எனப் பெயரிடப்பட்டது. தந்தை இறந்த பின் நரசிங்கராசன் தன் தங்கையை மணமுடித்து செங்கடகநகரிலிருந்து ஆட்சி நடாத்தினான். அவ்வாறு ஆட்சி நடத்திய காலத்திலே தான் சோழநாட்டிலிருந்து யாழ்பாடி ஒருவன் செங்கடநகரிக்கு வந்து மன்னன் புகழைப்பாடி யாழ்ப்பாணக் குடாநாட்டினை தனது பரிசாகப் பெற்றான். அவனே யாழ்ப்பாண இராச்சியத்தை தாபித்தவனாவான்" (யாழ்ப்பாணவைபவமாலை, பதிப்பு 1995).

தமிழ் வரலாற்று இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள உக்கிரசிங்கன் கதையினை நம்பகத்தன்மையற்றதென்றே கொள்ள வேண்டும் என்றும் இக்கதையை நன்கு ஆராய்ந்து பார்த்தால் இதில் வேறும் பல கட்டுக்கதைகளும் இடப்பெயர் விளக்கங்களும் கலந்திருப்பதைக் காணலாம் என்றும் கா.இந்திரபாலா குறிப்பிடுகிறார். மேலும் அவர் குறிப்பிடுகையில் உக்கிரசிங்கன் கதை பெரும்பாலும் சிங்கள மக்கள் மத்தியில் வழங்குகின்ற விஜயமன்னன் பற்றிய கதையினைத் தழுவியதாக அமைகின்றது. தமிழ்

 ISSN (Print): 2448-9204

வரலாற்றேடுகளில் கூறப்பட்டுள்ள குளக்கோட்டன் கதையின் சில அம்சங்களும் இதிலே கலந்துள்ளன எனக் குறிப்பிடுகின்றார் (இந்திரபாலா, 1972., Indrapala, 1970). கா.இந்திரபாலா விஜயன் கதையின் அம்சங்களை இலங்கையின் பாளி, சிங்கள வரலாற்றேடுகளில் மட்டுமல்லாது இந்திய, சீனநூல்கள் சிலவற்றிலும், இலங்கைத் தமிழர் வரலாற்றுக்கதைகளில் ஒரு திரிந்த வடிவத்தில் காணப்படுவதாக குறிப்பிடுகின்றார். இதற்கு தென்கிழக்காசியாவில் சமஸ்கிருதமயமாக்கம் ஏற்பட்ட போது, அதன் தாக்கத்தால் எழுந்த கதைகளின் பெதுவான பண்பாக கொள்கின்றார். குறிப்பாக அகத்தியர், பரசுராமர், அர்ச்சுனன், கௌண்டின்யர், சோழர், பாண்டியர், பல்லவர் ஆகியோர் பற்றிய கதையமைப்பு முறையின் பெதுத்தன்மையூடாகக் காணலாம் எனக் குறிப்பிட்டுள்ளார் (இந்திரபாலா, 2006).

யாழ்பாணவைபவமாலை தவிர, வையாபாடல், கைலாயமாலை, திருகோணாசலபுராணம், கோணேசர் கல்வெட்டு, மட்டக்களப்பு மான்மியம் ஆகிய தமிழிலக்கியங்களிலும் உக்கிரசிங்கன் - மாருதப்புரவீகவல்லி பற்றிய ஐதீகங்களினை வேறுபட்ட வடிவங்களில் காணமுடிகின்றது. வையாபாடலில் யாழ்பாடியின் கதைக்குப் பின்னர் உக்கிரசிங்கன் - மாருதப்புரவீகவல்லி கதையினை காணமுடிகின்றது (வையாபாடல், 1980 (பதிப்பு)). திரிகோணாசல புராணத்தில் திசையுக்கிர சோழனின் மகளாக மாருதப்புரவீகவல்லி காணப்படுவதோடு, அவளின் கணவனாக உக்கிரசிங்கன் குறிப்பிடப்பட்டுள்ளான். அத்துடன் அவளுடைய குதிரைமுகம் நீங்க தீர்த்த யாத்திரை சென்ற தலங்கள் குறிப்பாக ஈழத்திலுள்ள தலங்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன (திரிகோணாசல புராணம், 1909 (பதி)). கோணேசர் கல்வெட்டில் உக்கிரசிங்கன் - மாருதப்புரவீகவல்லி கதை குளக்கோட்டன் - ஆடகசவுந்தரி கதையாக மாற்றமடைந்ததோடு, மாருதப்புரவீகவல்லி அசோகசுந்தர், மனோன்மனிசுந்தரி ஆகியோரின் மகளாகவும், கலிங்க நாட்டு இளவரசியாகவும் மாற்றமடைந்துள்ளாள் (கோணேசர் கல்வெட்டு, 1915 (பதிப்)). மட்டக்களப்பு மான்மியத்தில் உக்கிரசிங்கன் - மாருதப்புரவீகவல்லி கதை ஆடகசவுந்திரி – மகாசேனன் கதையாக காணப்படுகின்றது (மட்டக்களப்பு மான்மியம், 1962 (பதிப்)). மேலும் யாழ்ப்பாணவைபவமாலை, கைலாயமாலை ஆகிய இலக்கியங்களில் சோழஇளவரசி மாருதப்பிரவல்லி, மாருதப்புரவீகவல்லி என அழைக்கப்பட்டதுடன், வையாபாடலில் மாருதப்பிரவை எனவும், திரிகோணாசல புராணத்தில் மாருதப்ரவீகவல்லி, மாருதவீகவல்லி எனவும், கோணேசர் கல்வெட்டு, மட்டக்களப்பு மான்மியம் போன்றவற்றில் சோழ இளவரசி கலிங்கநாட்டு இளவரசியாகவும் கொள்ளப்படுகின்றாள்.

இந்திரபாலா உக்கிரசிங்கன் - மாருதப்புரவீகவல்லி மற்றும் விஜயனது வரலாற்றுக் கதைக்கும் உள்ள தொடர்பு எவ்வாறு ஏற்பட்டிருக்கலாம் எனக் குறிப்பிடும் போது விஜயன் கதையை வேறோர் இராச்சியத்தின் தோற்றத்தை விளக்கும் கதையாகக் கூறாது புதிய இராச்சியத்தின் தோற்றத்தை விளக்கும் கதையாகத் தம்மையறியாமலேயே அம்மக்கள் மாற்றிக் கொண்டனர் என்று குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக யாழ்ப்பாணத்தில்


ISSN (Print): 2448-9204

ஆரிய செல்வாக்குப் பரவுவதற்கு முன்பு வாழ்ந்த மக்கள் வரலாற்றாரம்ப காலத்திலே ஆரியமயமாக்கப்பட்டுச் சிங்கள மொழி பேசுவோராக வரலாற்றுக் காலத்திலே மாறியிருந்தனர். அதாவது இலங்கைத் தீவின் பிறபாகங்களில் வாழ்ந்தவர்களைப் போன்று அவர்களும் சிங்களவர்களாக மாறியிருந்தனர். ஆகவே அவர்கள் மத்தியிலும் விஜயன் கதை வழங்கி வந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. எனினும் அண்மைக்கால தொல்லியல் ஆய்வுகள் ஈழத்தில் ஆரியக் குடியேற்றம் இடம்பெற்றதிற்கு பதிலாக ஈழத்தின் ஆதிக்குடிகள் தென்னிந்திய மக்களே என்பதனைப் புலப்படுத்தி நிற்கின்றன (சிற்றம்பலம், 1993). எனவே தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் பார்க்கும் போது கா.இந்திரபாலாவின் கருத்து பொருத்தமானதாக தெரியவில்லை.

முதலியார் இராசநாயகமும், ஞானப்பிரகாசரும் உக்கிரசிங்கன், மாருதப்புரவீகவல்லி கதைகளில் கட்டுக்கதையம்சங்கள் காணப்பட்டாலும் கூட இவற்றில் வடஇலங்கையின் தொன்மையான வரலாறும் உள்ளடங்கியுள்ளனதென்பதைச் சுட்டிக்காட்டியுள்ளனர் (ஞானப்பிரகாசர், 1928., Rasanayakam, 1926). தமிழ் வரலாற்றேடுகளில் கூறப்பட்டுள்ள உக்கிரசிங்க மன்னன் வரலாற்றுக்கதைகளில் சில உண்மைகள் இருக்கலாம் என்பதனை பரணவிதானவும் கருதுகிறார். உக்கிரசிங்கன் கி.பி எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவன் என்பதை ஏற்றுக்கெள்ளாவிட்டாலும் பரணவிதான அம்மன்னனைக் கோணேசர் கல்வெட்டு என்னும் நூலிலே குறிப்பிடப்பட்டுள்ள சிங்ககுமாரானாக இருக்கலாம் எனக் கூறியுள்ளார் (Paranavitana, 1962). கோணேசர் கல்வெட்டிலே கூறப்பட்டுள்ள கதையை நம்புவதெனில், சிங்க முகத்தையுடைய மன்னனாகிய உக்கிரசிங்கன் அல்லது சிங்க குமாரன் என்பவன் மாகன் வாழ்ந்த காலமளவிலேயே வாழ்ந்த ஒருவன் என்று கொள்ளலாம் என்று பரணவிதான குறிப்பிடுகிறார் (Paranavitana, 1962). இவ்வாறாக இவ்வாய்விற்குரிய மூலநூல்களான மகாவம்சம், யாழ்ப்பாண வைபவமாலை தவிர, தமிழிலக்கியங்களான கைலாயமாலை, வையாபாடல், திரிகோணாசல புராணம், மட்டக்களப்பு மான்மியம், கோணேசர் கல்வெட்டு ஆகிய மூலநூல்களுடன் ஒப்பிட்டு ஆராயப்பட்டிருப்பதுடன், இரண்டாம்தர நூல்களும் இவ்ஆய்விற்கு உதவியுள்ளன.

## ஆய்வு முறையியல்

இலங்கையின் ஐதீக கதைமரபுகளில் விஜயன் மற்றும் உக்கிரசிங்கன் மாருதப்புரவீகவல்லி கதைகள் - ஒர் ஒப்பீட்டாய்வு என்ற இவ்வாய்வுக்குரிய நோக்கங்களை நிறைவுசெய்வதன் பொருட்டு இவ்விரு ஐதீகங்களினை அடிப்படையாகக் கொண்டெழுந்த மகாவம்சம், யாழ்ப்பாணவைபவமாலை போன்ற மூலநூல்களிலிருந்தும், இவ்மூலநூல்களினை அடிப்படையாகக் கொண்டெழுந்த இரண்டாம்தர நூல்களிருந்தும் பிற்கால தொல்லியல் ஆய்வுமுடிவுகளிலிருந்தும் தரவுகள் பெறப்பட்டுள்ளன. முதல்தர தரவுகள் இரண்டாம்தர தரவுகளுடன் ஒப்பிட்டு ஆராயப்பட்டு அதனை பகுப்பாய்வு செய்வதாகவே இவ்வாய்வு அமைகின்றது.


ISSN (Print): 2448-9204

**ஆய்வு முடிவுகளும், கலந்துரையாடலும்**

கி.பி 5 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மகாநாமதேரரால் தொகுக்கப்பட்ட மகாவம்சமானது இலங்கையின் நாகரிகஉருவாக்கம், அரச உருவாக்கம் தொடர்பான வரலாறுகளை வடஇந்தியாவிலிருந்து வந்த விஜயன் வருகையுடனேயே தொடர்புபடுத்துகின்றது. அதேபோன்று பிற்பட்ட காலங்களில் எழுந்த யாழ்ப்பாணவைபவமாலை, கைலாயமாலை, வையாபாடல், திரிகோணோசலபுராணம், கோணேசர்கல்வெட்டு போன்ற தமிழிலக்கியங்களில் விஜயன், உக்கிரசிங்கன், மாருதப்புரவீகவல்லி கதைகளுடாக வட, கிழக்கு இலங்கையின் தொன்மையான நாகரிக உருவாக்கம், அரச உருவாக்கம் போன்ற தகவல்களினை காலமுறையற்ற விதத்தில் குறிப்பிட்டு நிற்கின்றன. இதற்கு வடஇலங்கையில் வரலாற்று நிகழ்ச்சிகளை காலமுறைப்படுத்தி தொகுக்கும் வரலாற்று மரபு ஒன்று காணப்படவில்லை என்பதே காரணமாகும். மாறாக வடபகுதியில் ஆட்சி செய்த வம்சங்கள் பற்றி கேள்விப்பட்ட (ஐதீகங்களாக) இவ்விலக்கியங்களை ஆக்கிய ஆசிரியர்கள் வடபகுதியின் அரசஉருவாக்கத்தின் தொன்மையினையும், இந்தியத் தொடர்புகளினையும் கருப்பொருளாக கொண்டு வெவ்வேறுபட்ட காலத்துக்குரிய வரலாற்றுச் செய்திகளினை காலவரன் முறையற்ற விதத்தில் தொகுத்திருந்தனர் எனக்கொள்ள முடிகின்றது. குறிப்பாக யாழ்ப்பாணவைபவமாலையில் இற்றைக்கு 2400 ஆண்டுகளுக்கு முன் விஜயனின் கதிரமலை ஆட்சி பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது (யாழ்ப்பாணவைபவமாலை, பதிப்பு 1995). அத்துடன் இவ்விலக்கியத்தில் சோழ நாட்டைச் சேர்ந்த யாழ்ப்பாணன் செங்கடக நகரியிலிருந்து அரசாட்சி செலுத்தும் வாலசிங்க மகாராசன் பேரிற் பிரபந்தம் பாடிக் கொண்டு போய் யாழ் வாசித்துப் பாடினான். அதைக்கேட்டு சந்தோசமடைந்த மன்னன் யாழ்ப்பாணத்தை பரிசாக வழங்கிய கதையும் கூறப்பட்டுள்ளது (யாழ்ப்பாணவைபவமாலை, பதிப்பு 1995). யாழ்ப்பாண வைபவமாலையில் நல்லூரினை ஆட்சி செய்வதற்கு பாண்டி மழவனால் அழைத்து வரப்பட்ட பாண்டி நாட்டு ஆரியச் சக்கரவர்த்திகளில் முதலாமானான சிங்கையாரியன் (கூழங்கைச் சக்கரவர்த்தி) மாருதப்பிரவையின் சகோதரனான சிங்ககேதுவின் மருமகன் என அழைக்கப்பட்டுள்ளான். வையபாடலில் உக்கிரசிங்கன் (உக்கிரசேனசிங்கன்), மாருதப்பிரவை கதைக்கு முன்னதாக, யாழ்பாடி கதை கூறப்பட்டுள்ளது. இதில் கலிமூவாயிரம் வருடத்தில் (கி.மு 101) விபூஷணனின் அவையில் யாழை வாசிப்பவனாகிய யாழ்பாடி வடகரையில் தனக்கு கிடைத்த மணற்றியை ஆள்வதற்குத் தசரதனின் மைத்துனனான குலகேது என்பவனது மகன் கோளுறுகரத்துக் குரிசிலை (கூழங்கைச் சக்கரவர்த்தியை) அழைத்து வந்த யாழ்ப்பாணத்தை ஆளச்செய்தான். இவ்கோளுறுகரத்துக் குரிசில் (கூழங்கைச் சக்கரவர்த்தி) அயோத்தி மன்னன் தசரதனின் மைத்துனன் எனக் கூறப்படுகின்றது. மேலும் மாருதப்பிரவீகவல்லியின் தந்தை திசையுக்கிர சோழன் என அழைக்கப்படுவதோடு இவன் கூழங்கைச் சக்கரவர்த்தியின் மாமன் எனவும் சுட்டப்படுகின்றான். இவ்வாறாக ஐதீககதைமரபுகளான வரலாற்றுச் செய்திகள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட விதத்தில்

 ISSN (Print): 2448-9204

(தசரதன், விபூஷணன், கூழங்கைச் சக்கரவர்த்தி, திசையுக்கிர சோழன், சிங்கையாரியன்) எவ்விதத் தொடர்புமின்றி தமிழிலக்கியங்களில் கூறப்பட்டுள்ளதனைக் காணமுடிகின்றது. எனினும் இவ்விலக்கியங்களின் கருப்பொருளாக அப்பிரதேசத்தின் தொன்மையான அரச உருவாக்கம், தென்னிந்தியத் தொடர்புகள் என்பன அமைந்திருந்ததென்பதை மறுக்க முடியாதாகும்.

இவ்விரு ஐதீக வரலாற்றுக் கதைமரபுகளான விஜயன், உக்கிரசிங்கன் கதைகள் வேறுபட்ட நிகழ்வுகளை மையப்படுத்தி நின்றாலும் அவற்றிக்கிடையே ஓர் பொதுவான ஒற்றுமையினை அவதானிக்கமுடிகின்றது. இதனையே கா. இந்திரபாலா உக்கிரசிங்கன் கதை பெரும்பாலும் சிங்கள மக்களிடையே நிலவுகின்ற விஜயமன்னன் பற்றியகதையை தழுவியதெனக் குறிப்பிடுகின்றார் (இந்திரபாலா, 2006). இவ்வகையில் இவ்விருகதை மரபுகளுக்கிடையிலான ஒற்றுமைகளை பின்வருமாறு இனங்காணலாம். விஜயன் கதையிலே வருகின்ற பாட்டனாகிய சிங்கமே தமிழிழக்கியங்களில் உக்கிரசிங்கனாகவும், பாட்டியாகிய கலிங்கநாட்டுத் தொடர்புடைய வங்கத்து இளவரசி மாருதப்புரவீகவல்லியாகவும், சிங்கத்திற்கும் இளவரசிக்கும் பிறந்த பிள்ளைகளான சிங்கபாகு, சீகவல்லியே உக்கிரசிங்கன் மாருதப்புரவீகவல்லியின் பிள்ளைகளான நரசிங்கராசன் (சிங்கன், செயதுங்கவீரபோகவரராச சிங்கன், சிங்ககுமாரன்) சண்பகாவதியாகவும் உருமாற்றப்பட்டுள்ளதாக கருதமுடியும். சிங்கபாகு, சீகவல்லி ஆகிய உடன்பிறந்தவர்கள் இருவரும் மணமுடித்தது போன்று உக்கிரசிங்கனின் பிள்ளைகள் இருவரும் மணமுடித்தாகவும் கூறப்பட்டுள்ளது. சிங்கத்தினைப் போன்று உக்கிரசிங்கனும் சிங்கத்திற்குரிய உடலுறுப்புக்களை கொண்டு விளங்குவதாகவே தமிழிழக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அத்துடன் இன்னொரு ஒற்றுமையாக விஜயன் கதையில் விஜயன் பாண்டிநாட்டு இளவரசியை தான் மணமுடிப்பதற்கு பெண்கேட்டு தூதனுப்பியது போன்று உக்கிரசிங்கனின் மகனும் தான்மணமுடிப்பதற்கு பாண்டிநாட்டிற்கு தூதனுப்பிய செய்தியும், பாண்டிய இளவரசியை மணந்த விஜயனுக்கு பிள்ளைகள் இல்லாததால் அவனுக்குப்பிறகு தனது சகோதரன் சுமித்தாவின் மகனை ...ஆட்சிப்பீடமேற்றிய செய்தியினை யாழ்ப்பாணவைபவமாலையும் "சாலி வாகன சகாப்தம் 717 இல் (கி.பி 795) விஜயராசனின் சகோதரன் மரபிற் பிறந்த உக்கிரசிங்கன் எனும் அரசன்...." எனக்குறிப்பிடுவதும் நோக்கத்தக்கதாகும். இவ்வாறாக தமிழிலக்கியங்களில் விஜயனது வழிவந்தவனாக அதாவது விஜயனின் சகோதரனின் மகனாக உக்கிரசிங்கனை குறிப்பிடுவதோடு மட்டுமல்லாது இன்னொரு இடத்தில் உக்கிரசிங்கனை விஜயனாகவே குறிப்பிட்டு, விஜயனாலேயே கதிரமலை அரசு நிறுவப்பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது. எனினும் மகாவம்சம் கூறும் விஜயன் கதைக்கும், தமிழிலக்கியங்கள் கூறும் உக்கிரசிங்கன் கதைக்கும் 1300 ஆண்டுகளுக்கு முற்பட்ட கால இடைவெளி இருந்தபோதும் கதிரமலை அரசின் தொன்மையை விளக்கவே யாழ்ப்பாணவைபவமாலை ஆசிரியர் விஜயனது கதையை கையாண்டுள்ளார் என்பதைத் தவிர வேறெதுவுமிருக்க முடியாதெனக் கொள்ள இடமுண்டு.

 ISSN (Print): 2448-9204

வடஇந்தியப் பண்பாட்டுக் கூறுகள் வெளிநாட்டு வர்த்தகத்தின் விளைவாக தென்னிந்திய, இலங்கைப் பிராந்தியங்களில் அறிமுகப்படுத்தப்பட்டன. இதனை சமஸ்கிருதமயமாக்கம் என அழைப்பர் (இந்திரபாலா, 2006). இதன் தாக்கமானது பின்னர் தென்கிழக்காசியா, சீன நாடுகளிலும் ஏற்பட்டிருந்தது. இச்சமஸ்கிருதமயமாக்கத்தின் தாக்கத்தினை ஆரம்பகால ஐதீகங்களை அடிப்படையாகக் கொண்ட வரலாற்று கதைகளிலும் காணமுடிகின்றது. குறிப்பாக இந்நாடுகளில் ஏற்பட்ட அரசஉருவாக்கம் பற்றிய வரலாற்று கதைகளாக அவற்றை அடையாளங்காண முடிகின்றது. அகத்தியர், பரசுராமர், அர்ச்சுனன், கௌண்டின்யர், சோழர், பாண்டியர், அர்ச்சுனன், விஜயன் கதைகளுக்கிடையே ஒரு பொதுவான ஒற்றுமையைக் காணமுடிகின்றது. இவ்ஒற்றுமையானது வடக்கிலிருந்து தெற்கு நோக்கிச் சென்ற பிராமண அல்லது சத்திரிய தலைவர்கள் தாம் சந்தித்த பின்தங்கிய மக்களை அடக்கி வெற்றி கொண்டு, அம்மக்கள் கூட்டத்தைச் சேர்ந்த முக்கிய கன்னியரை மணம் முடித்து பின்னர் அம்மக்கள் கூட்டத்தின் மீது ஆதிக்கம் செலுத்தியமை போன்ற விடயங்களாகும். அத்துடன் புதிதாக வந்த தலைவர்கள் மணம் முடித்த பெண்கள் மனிதரல்லாத இனங்களைச் சேர்ந்தவர்களாகக் கூறப்படுகின்றது. பொதுவாக சமஸ்கிருதமயமாக்கம் நடைபெறாத இடங்களைச் சேர்ந்தவர்களை பின்தங்கிய மக்களாகவும், புதிதாக வருகை தந்த தலைவனுடயே நாகரிகம் தோற்றம் பெற்றதாகவும் இக்கதைகள் கூறும். இவ்வாறானதொரு பொதுவான தாக்கத்தினை விஜயன் - உக்கிரசிங்கன் கதைகளுடாக காணமுடிவதுடன், வடஇந்திய தென்னிந்திய தொடர்புகளும் கூறப்பட்டுள்ளது. ஆகவே இவ்ஐதீக கதைகளுடாக வெளிநாட்டு வர்தகத்தினூடு ஏற்பட்ட பண்பாட்டுத் தொடர்புகளை அதிலும் குறிப்பாக தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் பார்க்கும் போது, இவை வரலாற்று உதய காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட வெளிநாட்டு வர்த்தகத்தின் பின்னனியிலான பண்பாட்டு வளர்ச்சியினை சுட்டுவதாகக் கொள்ளலாம்.

விஜயன் உக்கிரசிங்கன் வரலாற்றுக் கதைகள் நம்பமுடியாத ஐதீகங்களாக காணப்பட்டாலும் அவற்றில் கருப்பொருளாக இலங்கையின் புராதன மக்கள், அரசஉருவாக்கம் என்பவற்றுடன், தென்னிந்தியாவுடனான நெருங்கிய பண்பாட்டுத் தொடர்புகளும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. குறிப்பாக மகாவம்சத்தில் வடஇந்தியாவிலிருந்து விஜயனது வருகையுடன் தான் இலங்கையில் மனித, நாகரிக, அரச உருவாக்கம் ஏற்பட்டதனைக் குறிப்பிடுகின்றன. யாழ்ப்பாண வைபவமாவலையில் விஜயனது வழிவந்தவனாகவே உக்கிரசிங்கன் கூறப்பட்டு, அவனால் ஏற்பட்ட மனித, அரச, நாகரிக உருவாக்கத்தினை விளக்குவதாகவும் அமைகின்றது. குறிப்பாக யாழ்ப்பாண வைபவமாலையில் "இற்றைக்கு 2400 வருடங்களுக்கு முன் இவ்விலங்கை நாடு யானை, புலி, கரடி மிருகங்கள் சஞ்சரிக்கும் பெருவனாந்தரமாயிருந்தது. அவ்வனாந்தரத்திற் சில வேடரேயன்றி யாதொரு மானிட சீவனுமிருந்ததில்லை. அக்காலத்திலே வங்கதேசத்துச் சத்திரிய மரபிற் பிறந்து, இலாட தேசத்தையரசாண்ட

 ISSN (Print): 2448-9204

சிங்கவாகுவின் குமாரன், விஜயனென்பவன் மகா துஷ்டனாயிருந்ததினால், அவனைப் பிதாவாகிய சிங்கவாகு துரத்திவிட, அவன் புறப்பட்டு அங்குமிங்கும் போக ஒருவரும் இடங்கொடாததினால் அவன் காசிக்குப் போய் அங்கேயிருந்தான். அவ்விடத்தில் விஜயகுமாரனுக்கு நீ இலங்கை நாட்டின் மத்தியிலுள்ள கதிரைமலையிற் போயிரு, அந்த நாடு உனக்குடையது எனச் சொப்பனத்தில் உத்தரவு கிடைத்ததினால் …….தனது பரிவாரங்களுடன் கதிரைமலையிற் சேர்ந்தான் (யாழ்ப்பாணவைபவமாலை, பதிப்பு 1995). யாழ்ப்பாணவைபவமாவையின் இன்னொரு இடத்தில் சாலி வாகன சகாப்தம் 717 இல் (கி.பி 795) விஜயராசனின் சகோதரன் மரபிற் பிறந்த உக்கிரசிங்கன் என்னும் அரசன் வடதிசையிலிருந்து வெகு திரளான சேனைகளைக் கொண்டு வந்து போராடிச் சில தலைமுறையாய் இழந்து போன இவ்விலங்கை அரசாட்சியில் அரைவாசி வரைக்கும் பிடித்துக் கதிரைமலையிலிருந்து அரசாண்டு வந்தான். தென்னாடுகளை வேற்றரசன் ஆண்டு வந்தான் (யாழ்ப்பாணவைபவமாலை, பதிப்பு 1995).

மேற்கூறப்பட்ட யாழ்ப்பாணவைபவமாலைக் கூற்றுக்கள் இரண்டினையும், மகாவம்சத்தில் காணப்படும் விஜயன் கதையினையும் ஒப்பிட்டு ஆராயுமிடத்து, நீண்டகால இடைவெளியினை இவ்விரு ஐதீககதைமரபுகள் கொண்டிருந்தாலும் விஜயன்கதை மரபிற்குரிய காலந்தொட்டு தமிழிலக்கியங்கள் குறிப்பிடும் பிரதேசங்களின் தொன்மையையும், தொடர்ச்சியையும் எடுத்துக்காட்டுவதாகவே அமைகின்றது. இத்தகையதோர் பின்னனியிலேயே உக்கிரசிங்கன் கதையில் விஜயன் கதைமரபின் சாயலைக் காணமுடிவதுடன், விஜயமன்னனே கதிரமலை மன்னனாக நேரடியாகவும், விஜயமன்னனின் சகோதரன் மரபிற் வந்தவனாக உக்கிரசிங்கமன்னனாகவும் காணமுடிகின்றது. அத்துடன் கிழக்கிலங்கையில் இடம்பெற்ற தமிழரசுருவாக்கத்தினை மையப்படுத்திய வகையிலேயே குளக்கோட்டன், ஆடகசவுந்தரி ஐதீகம் உருவாக்கப்பட்டுள்ளதனையும் அவதானிக்கமுடிகின்றது. இந்தவகையில் மகாவம்சம், தமிழிலக்கியங்களில் கூறப்பட்ட இக்கதைகள் ஐதீகமாக காணப்பட்டபோதும் அவற்றில் மையப்படுத்தப்பட்ட இடப்பெயர்களினை தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் நோக்குவது அவசியமாகின்றது. விஜயன் அவனது பரிவாரங்களுடன் வந்திறங்கிய இடமாக தம்பபண்ணி காணப்படுகின்றது. இது மன்னார் மாவட்டத்திலுள்ள அருவி ஆற்றின் கரையோரத்தில் அமைந்திருந்ததென்பது பொதுவான கருத்தாகும்.

இவ்விடத்தில் விஜயன் தனது தலைநகரினையும் அமைத்தான் என அறியமுடிகின்றது (Mahavamsa, 1950). காலப்போக்கில் இப்பெயர் முழுஈழத்திற்குமான பெயராக (தம்பபண்ணி, தப்ரபேன்) மாற்றமடைந்ததுள்ளது என்பதனை பாளிநூல்களிலும், கிரேக்க அறிஞர்கள் தரும் சான்றுகளிலிருந்து அறியமுடிகின்றது. தம்பபண்ணி எனும் பெயர் தமிழகத்தில் தாம்ரவர்ணி ஆற்றின் தொடர்பால் ஏற்பட்டதாக கருதப்படுகின்றது (சிற்றம்பலம், 1993). அதாவது ஈழத்தின் ஆதிக்குடியேற்றம் தமிழகத்தின் தாம்ரவர்ணி ஆற்றின் கரையோரத்திலிருந்து இங்கு ஏற்பட்டது என்ற செய்தியினையே எடுத்துக்காட்டி

 ISSN (Print): 2448-9204

நிற்கின்றதெனலாம். இக்கருத்தினை மேலும் உறுதிப்படுத்துவதில் கி.மு 6ஆம் நூற்றாண்டுக்குரியதாக விஜயன் கதையில் வரும் இன்னொரு ஐதீகமும் அமைகின்றது. இவ்ஐதீகத்தில் விஜயன் மணம்முடிப்பதன் பொருட்டு வரவழைக்கப்பட்ட பாண்டிய இளவரசியும், தோழியரும் வந்திறங்கிய இடமாக மாதீத்த துறைமுகம் குறிக்கப்பட்டுள்ளது (Mahavamsa, 1950). இது ஆதிக்குடியேற்றம் தமிழகத்தின் பாண்டிநாட்டிலிருந்து ஈழத்திற்கு வந்ததை உறுதிப்படுத்துகின்றதெனலாம் (சிற்றம்பலம், 1993). இதை உறுதிப்படுத்தும் விதமாக வரலாற்றாசிரியரான மெண்டிஸ் விஜயனின் கதையில் கூறப்பட்ட ஐதீகமாக, விஜயனின் தோழர்களால் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றங்களான அநுராதபுரகம, உபதிஸ்ஸகம, உருவெலவிஜித, உரோகணதீகாயு போன்றவை ஏற்கனவே இந்நாட்டில் வளர்ச்சி பெற்ற குடியேற்றங்கள் என்றும், இக்கதை உருவாக்கப்பட்ட காலத்தில் இக்கதையுடன் இவ்விடங்கள் இணைக்கப்பட்டதென்றும் குறிப்பிடுகிறார் (Mendis, 1965). இதனால் விஜயன் கதை கிறிஸ்தவ சகாப்தகாலத்திற்கு பிற்பட்ட காலத்தில் இயற்றப்பட்டிருப்பதினால், அக்கதையில் கிறிஸ்தவ சகாப்தகாலத்திற்கு முற்பட்ட வரலாறு செவிவழிகதையின் அடிப்படையில் தொகுக்கப்பட்டிருக்கலாம் அதாவது அம்மையத்தில் ஏற்பட்ட வரலாற்றுதயகால மனிதநாகரிக வரலாறு, நாகரிக உருவாக்கம் என்பவற்றை கருப்பொருளாக கொண்டிருக்கலாம் அல்லது அக்கதை உருவாக்கப்பட்ட காலப்பகுதியான வரலாற்றுக்காலத்தில் சிறப்புபெற்ற இடத்திற்கு அதன் தொன்மையை விளக்க விஜயன் கதையினைப் பயன்படுத்தியிருக்கக்கூடும். ஏனெனில் கி.மு 6 ஆம் நூற்றாண்டளவில் வடஇந்தியாவிலிருந்து ஈழமக்களின் மூதாதையினராகிய விஜயனும், அவனது தோழர்களும் வருகைதந்திருந்தனர் எனக் குறிப்பிடப்பட்டாலும் அதனை உறுதிப்படுத்துவதற்கான தொல்லியல் ஆதாரங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. மாறாக கிடைத்த தொல்லியல் சான்றுகள் தென்னிந்தியாவிலிருந்து ஈழமக்களின் மூதாதையினர் வருகை தந்திருந்தனர் என்பதையே எடுத்துக்காட்டியுள்ளன. குறிப்பாக மாந்தையில் 1950 களில் மேற்கொண்ட ஆய்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புக்கூட்டினை ஆராய்ந்த அறிஞர்கள் இது தற்காலத் தென்னிந்திய மக்களுடைய தோற்றத்தையே ஒத்துக்காணப்படுகின்றது எனவும் எடுத்துக்காட்டியுள்ளனர். இதேபோன்று மன்னார்க் குடாக் கரையோரத்தில் அமைந்துள்ள கலாஓயா நதிக்கரையிலுள்ள பொம்பரிப்பு ஈமச்சின்னங்களில் உள்ள மனித எலும்புக் கூடுகளை ஆராய்ந்த அறிஞர்களும் இக்கருத்தினையே குறிப்பிட்டுள்ளனர். அதிலும் குறிப்பாக பொம்பரிப்பு ஈமச்சின்ன மையமானது தமிழகத்தின் தாம்ரவர்ணி நதிக்கரையிலமைந்த ஆதிச்சநல்லூருக்கு நேர்எதிரே அமைந்திருப்பதும், பொம்பரிப்பு மற்றும் ஆதிச்சநல்லூரில் கிடைக்கப்பட்ட தொல்லியல் எச்சங்களுக்குமிடையே மிக நெருங்கிய ஒற்றுமை காணப்படுவது மேலும் நோக்கத்தக்கது. இதனாலேயே அறிஞர்கள் வரலாற்று உதய காலமான பெருங்கற்கால பண்பாட்டினைப் பின்பற்றிய மக்கள் பாண்டிநாட்டிலிருந்து மன்னார் கரைக்கு இடம்பெயர்ந்திருக்கலாம் எனக் குறிப்பிடுகின்றனர்.


ISSN (Print): 2448-9204

சுதர்சன் செவியரட்ண தமிழகத்தின் கிழக்கு கரையோரப் பிரதேசங்களிலிருந்து வடகிழக்கு இலங்கைக்கு ஆதியிரும்புக்கால பண்பாடு பரவியதெனவும் பின்னர் அங்கிருந்தே நதிகள் வழியாக வடமத்திய இலங்கைக்கும் இப்பண்பாடு பரவியதெனவும் குறிப்பிடுகின்றார். (Seneviratne, 1984., இந்திரபாலா, 2006, சிற்றம்பலம், 1993). இத்தொடர்புகளின் அடிப்படையில்தான் விஜயன் கதையின் ஐதீகங்களில் தம்பபண்ணி இணைக்கப்பட்டுள்ளதெனலாம். எனினும் இவ்கதைகள் ஐதீகமாக காணப்பட்டாலும் அவற்றில் குறிப்பிடப்பட்ட மையங்களில் நாகரிகத்தொன்மை, அதன் தொடர்ச்சியை புலப்படுத்துவதாகவே அமைகின்றது. இக்கருத்தினையே சி.க.சிற்றம்பலம் உக்கிரசிங்கன் கதையிற் காணப்படும் விஜயன் கதையின் அம்சங்களுக்கு தாம் கொடுக்கும் விளக்கமாக - தென்பகுதியோடு தொடர்பு கொண்டிருந்த வடபகுதி மக்கள் விஜயன் கதையைத் தமது இராச்சியத்தின் பழைமை பற்றி, அதன் தோற்றம் தொடர்ச்சி பற்றி எடுத்துக்காட்ட பயன்படுத்தினர் என்றும் வடபகுதியில் நிலைத்திருந்த அரசு பற்றிய ஐதீகங்களை வளர்த்தெடுக்க இக்கதை பயன்படுத்தப்பட்டது என்று கூறுவதே மிகப்பொருத்தமான கருத்து எனக் கூறுவதும் குறிப்பிடத்தக்கதாகும். இத்தகையதோர் நிலைப்பாட்டினையே இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் ஆகியோரது கருத்துக்களிலிருந்தும் அறியமுடிகின்றது (சிற்றம்பலம், 1993, ஞானப்பிரகாசர், 1928, Rasanayakam,1926).

இதேபோன்று உக்கிரசிங்கன் - மாருதப்புரவீகவல்லி கதையில் கூறப்பட்ட மையங்களும் தொல்லியல் நோக்கில் ஆராய்ச்சிக்குரியவையாகும். யாழ்ப்பாண வைபவமாலை செய்தியில் இற்றைக்கு 2400 வருடங்களுக்கு முன்னர் கதிரமலையில் (கந்தரோடை) ஏற்பட்ட விஜயனது குடியேற்றம், அவனது குடியேற்றம் ஏற்படுவதற்கு முன்னர் வேடர்கள் தான் அங்கு வசித்து வந்தார்கள் என்ற செய்தியும் சுட்டிக்காட்டத்தக்கதாகும் (யாழ்ப்பாணவைபவமாலை, பதிப்பு 1995) இன்னொரு இடத்தில் விஜயராசனின் சகோதரன் மரபில் வந்தவனாக உக்கிரசிங்கனைக் குறிப்பிட்டு, அவனது ஆட்சி கி.பி 795 அளவில் கதிரமலையில் ஏற்பட்டதாகவும் குறிப்பிடுகின்றது (யாழ்ப்பாணவைபவமாலை, பதிப்பு 1995). இவ்விரு செய்திகளுக்குமிடையில் மிகநீண்டகால இடைவெளி காணப்பட்டபோதும், இவ்ஐதீகங்களினை ஆராயுமிடத்து பல்வேறான உண்மைகளை அறியமுடிகின்றதெனலாம். முதலாவது தொல்லியல் ஆய்வுகளின் மூலம் இலங்கையின் முக்கிய நாகரிக மையமாக அடையாளப்படுத்தப்பட்ட கந்தரோடையின் தொன்மையான வரலாற்றுச் சிறப்பு பிரதிபலித்திருந்தமை, இரண்டாவது தொல்லியல் ஆய்வுகள் பெரிதும் வளர்ச்சி பெறாத நிலையிலும், தொடர்ச்சியான வரலாற்று மரபினை தொகுக்கும் மரபு வடஇலங்கையில் காணப்படாத நிலையிலும் வேறுபட்ட செய்திகளினை காலவரன்முறையற்ற விதத்தில் கொண்டு இவ்ஐதீக கதைகள் தொகுக்கப்பட்டிருந்த போதும் கிறிஸ்தவ சகாப்தத்திற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரிலிருந்து கிறிஸ்தவ சகாப்தத்தின் (கி.பி 795) எட்டாம் நூற்றாண்டுவரையிலாவது கந்தரோடை நாகரிகத்தின் தொடர்ச்சியான தன்மையினை எடுத்துக்கூறுவதும் குறிப்பிடத்தக்கதாகும். இதனை உறுதிப்படுத்தும் விதமாக கந்தரோடையில் கிடைத்த தொல்லியல் எச்சங்களினை விஞ்ஞான காலக்கணிப்பிற்கு உட்படுத்தியதில் அதன் காலம் கி.மு 1000 வரை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

 ISSN (Print): 2448-9204

மூன்றாவதாக கந்தரோடை இந்தியாவுடன் அதிலும் குறிப்பாக தென்னிந்தியாவுடன் கொண்டிருந்த தொடர்புகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. கந்தரோடை வரலாற்றுதயகாலம்தொட்டு தென்னிந்தியாவுடன் தொடர்புற்ற மையமாகவே விளங்கியுள்ளதனை காணமுடிகின்றது. இலங்கையின் மனிதகுடியேற்றம், நாகரிக உருவாக்கம், அரசியல் படையெடுப்புக்கள், திருமணத் தொடர்புகள், சமயத்தொடர்புகள், வர்த்தக தொடர்புகள் போன்ற அனைத்து விடயங்களிலும் தென்னிந்தியாவின் பங்களிப்பு காத்திரமானது. இவற்றை உறுதிப்படுத்துவதில் தொல்லியல் சான்றுகளுக்கு முக்கிய பங்குண்டு. உதாரணமாக கந்தரோடையில் கிடைக்கப்பெற்ற வரலாற்றுதயகால மட்பாண்டங்களினை ஆய்வு செய்த விமலாபேக்லே அவை தென்னிந்திய இரும்புக்கலாச்சாரத்தைச் சேர்ந்த மட்பாண்டங்களை ஒத்து காணப்படுகின்றதெனவும், இத்தகைய ஒற்றுமைகள் கந்தரோடை, தென்னிந்திய மக்கள் ஒரே பண்பாட்டு வழிவந்தவர்களாக அல்லது இரு பகுதியினரும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர் என்பதை எடுத்துக்காட்டுவதாகவுள்ளதெனவும் குறிப்பிட்டுள்ளதனைக் கூறமுடியும் (Begley, 1973). மேலும் உக்கிரசிங்கன் மருதப்புரவீகவல்லி கதையில் தென்னிந்தியாவுனான தொடர்புகள் பல்வேறு இடங்களிலும் குறிப்பிடப்படுகின்றன. யாழ்ப்பாண வைபவமாலையில் உக்கிரசிங்கன் காலத்தில் இடம்பெற்ற தெண்டைநாட்டை அரசாண்ட தொண்டைமான் என்னும் அரசனின் வருகை (யாழ்ப்பாணவைபவமாலை, பதிப்பு 1995). பல்லவ நாட்டுத் தொடர்பினை புலப்படுத்துவதாக அமைகின்றது. பல்லவரது இலங்கையுடனான தொடர்பினை புலப்படுத்துவதில் காசாக்குடிச் செப்பேட்டிற் பல்லவ மன்னன் சிம்மவிஸ்ணு (கி.பி 575 – 600) காலத்தில் ஈழம் வெற்றிகொள்ளப்பட்ட செய்தி, கந்தரோடை, மாதோட்டம் ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற பல்லவ நாணயங்கள், பல்லவ கலைமரபிற்குரிய சிற்பங்கள் திருதேதீஸ்வரம், வெட்டுக்காடு, ஸ்சுறுமுனியா, திரியாய், நாலாந்தா, திருகோணமலை, குருக்கள்மடம் ஆகிய இடங்களில் கிடைத்த பல்லவ கலைமரபை பிரதிபலித்து நிற்கும் தொல்லியல் எச்சங்கள் என்பன குறிப்பிடத்தக்கனவாகும். அடுத்து மாருதப்புரவீகவல்லி கதையில் அவள் சோழஇளவரசியாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதனூடாக வடபகுதியில் உள்ள சைவசமய ஆலயங்களின் தொன்மை பற்றிக் குறிப்பிட்டு நிற்பதும், மாருதப்புரவீகவல்லி கதையுடன் கீரிமலை, காங்கேசன்துறை, மாவிட்டபுரம் ஆகிய இடங்களும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. இவை சோழர்காலத்தில் இந்துசமயம் பெற்ற செல்வாக்கினையும், தென்னிந்தியாவுடனான தொடர்பில் ஜம்புகோளப்பட்டடினம் - கீரிமலை – காங்கேசன்துறை துறைமுகநகரங்கள் பெற்ற செல்வாக்கினையும் குறிப்பிட்டு நிற்பதுடன் கந்தரோடையின் நாகரிக வளர்ச்சியில் இத்துறைமுகம் பெற்ற முக்கியத்துவத்தினையும் சுட்டுகின்றதெனலாம்.

உக்கிரசிங்கனது கதையில் அவன் பலகாலம் ஆட்சிசெய்து அரசுரிமையை இழந்த மன்னனாக கூறப்படுவதுடன், படைதிரட்டிவந்து மீண்டும் ஆட்சியுரிமையை பெற்ற மன்னனாக யாழ்ப்பாணவைபமாலையில் கூறப்படுகின்றான் (யாழ்ப்பாணவைபவமாலை,

 ISSN (Print): 2448-9204

பதிப்பு 1995). இவ்ஐதீகத்தினூடாக இலங்கையில் வடஇலங்கை, தென்னிலங்கை என்ற ரீதியில் இருமன்னர்களது ஆட்சி இடம்பெற்றதனையும், ஆட்சியுரிமையை இழந்த வடஇலங்கை மன்னன் அநுராதபுர மன்னரைப் போன்று தமிழகஞ் சென்று படையுடன் திரும்பி வந்து ஆட்சியுரிமையை நிலைநாட்டிய வரலாற்றுச் செய்திகளை சுட்டிக்காட்டுவனாகவுள்ளன. அதாவது இச்செய்திகளினை அக்கால அரசியல் சூழ்நிலைகளின் பின்னனியில் நோக்கினால், தமிழகத்தவர் இலங்கையின் அரசியலாதிக்கத்தினைக் கைப்பற்றுதல், சுதேச மன்னர் தாம் இழந்த அரசாட்சியை மீளப் பெறுதல் பொருட்டு தமிழகம் சென்று படையுடன் மீளத்திரும்புதல், தமிழக மக்களின் குடியேற்றம் ஆகிய வரலாற்று நிகழ்ச்சிகளை அடிப்படையாக கொண்ட ஐதீககதைமரபாக உக்கிரசிங்கன் - மாருதப்புரவீகவல்லி கதையினை நோக்கமுடியும். யாழ்ப்பாண வைபவமாலையில் காணப்படும் உக்கிரசிங்கன் கதையில் கதிரமலையிலிருந்து தலைநகர் செங்கடக நகரிக்கு மாற்றமடைந்த செய்தியினையும், வையபாடலில் தலைநகர் வாவெட்டிக்கு மாற்றமடைந்துள்ள செய்தியும் கூறப்பட்டுள்ளது (யாழ்ப்பாணவைபவமாலை, பதிப்பு 1995, வையாபாடல், செய்.17). இதனுடாக கந்தரோடையை அடுத்து வடஇலங்கையின் அடுத்து முக்கியம் பெற்ற தலைநகர் (வல்லிபுரம் அல்லது பெருநிலப்பரப்பு) பற்றியும், கந்தரோடையினை தலைநகராக கொண்ட யாழ்ப்பாண அரசின் ஆட்சிப்படர்ச்சியையும் சுட்டுவதாக கருதமுடியும்.

## முடிவுரை

இவ்வாறாக விஜயன், உக்கிரசிங்கன் கதைமரபுகளில் கட்டுக்கதைகள், வாய்மொழி மரபுகள், ஐதீகங்கள், காலவரன்முறையற்ற செய்திகள் என்பன காணப்படுமிடத்தும் அவற்றிலிருந்து கூறப்படும் தொன்மையான வரலாற்றுகருத்தினை பிரித்தறிவது வரலாற்றாசிரியரின் கடமையாகும். இவ்விரு கதைமரபுகளிலும் காணப்படும் ஒற்றுமைகளை ஆராயுமிடத்து, எவ்வாறு விஜயன் கதை ஐதீகமாக காணப்பட்டாலும்கூட அக்காலத்தில் இலங்கையின் தொன்மையான மனித குடியேற்றம், நாகரிகவுருவாக்கம், அரசஉருவாக்கம், அதன் தொடர்ச்சி போன்றவற்றை மையப்படுத்தியதே, அதேபோன்று உக்கிரசிங்கன் - மாருதப்புரவீகவல்லி கதைமரபும் விஜயன் கதையின் காலந்தொட்டு (கி.மு 6ம் நூற்றாண்டு) வடக்கு, கிழக்கு இலங்கையின் தொன்மையான நாகரிகவுருவாக்கத்தினையும், மனிதவரலாற்றினையும், நாகரிகத் தொடர்ச்சியினையும், அரச உருவாக்கத்தினையும் மையப்படுத்தியவகையில் தோற்றம் பெற்றிருந்தன எனக் கொள்ள முடியும். கிழக்கிலங்கையில் இடம்பெற்ற தமிழரசுருவாக்கத்தினை மையப்படுத்திய வகையிலேயே குளக்கோட்டன், ஆடகசவுந்தரி ஐதீகம் உருவாக்கப்பட்டுள்ளதனையும் அவதானிக்கமுடிகின்றது. வரலாற்று இலக்கியங்களில் காணப்படும் வரலாற்றுக் கதைகளில் நம்பமுடியாத வரலாற்றுச் செய்திகள் பல காணப்பட்டாலும் புராதன அரச உருவாக்கம், நாகரிக உருவாக்கம், புராதன வரலாற்று மையங்களை கண்டறிவதற்கு அவை துணையாக இருந்து வருவதற்குப் ஆதாரங்கள்

 ISSN (Print): 2448-9204

காணப்படுகின்றன. அந்தவகையில் வடக்கு, கிழக்கு இலங்கையில் ஏற்பட்ட தமிழ் அரச உருவாக்கம், நாகரிக வளர்ச்சி பற்றி அறிந்து கொள்வதில் உக்கிரசிங்க மன்னன் மாருதப்புரவீகவல்லி வரலாற்றுக்கதைகளுக்கும் முக்கிய பங்குண்டு. விஜயமன்னன் வரலாற்றுக்கதையில் மன்னார் மாவட்ட கரையோரப்பிரதேசம் (தம்பபண்ணி, மாதீத்த) வரலாற்றுதயகாலப் பண்பாட்டில் பெற்ற முக்கியத்துவம், அதன் அமைவிடச் சிறப்பு காரணமாக நாகரிக உருவாக்கத்தில் பெற்ற முக்கியத்துவம், அரசஉருவாக்கம், தென்னிந்தியாவுடான தொடர்புகள், நாட்டின் உட்பகுதிகளுக்கு பண்பாட்டினை பரவலடையச் செய்தல் போன்ற அம்சங்களை அடிப்படையாகக் கொண்ட வரலாறுகளே ஐதீகமாக மாற்றமடைந்துள்ளன. அதேபோன்று உக்கிரசிங்கமன்னன் மாருதப்புரவீகவல்லி கதையும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களின் தொன்மையான நாகரிக உருவாக்கம், தென்னிந்தியச் தொடர்புகள், அரச மரபின் தொன்மை, தொன்மையான இடங்கள் என்பவற்றிலான வரலாற்றினை இணைத்து ஐதீகமாக மாற்றமடைந்துள்ளதனைக் காணமுடிகின்றது. குறிப்பாக தம்பபண்ணி – மாதீத்த, கதிரைமலை, கீரிமலை, மாவிட்டபுரம், பெருநிலப்பரப்பு ஆகிய இடங்களில் இடம்பெற்ற புராதன நாகரிக உருவாக்கம், தம்பபண்ணி – மாதீத்த, மற்றும் கதிரமலை என்பவற்றை மையமாகக் கொண்ட அரசஉருவாக்கம், மாதீத்த, ஜம்புகோளப்பட்டினம் - காங்கேசன்துறை போன்ற இயற்கைத் துறைமுகங்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து பெற்ற செல்வாக்கு என்பன எடுத்துக்காட்டப்படுகின்றன. ஏனைய இடங்களில் முறையான தொல்லியல் ஆய்வுகள் இடம்பெறாத போதும், மாதோட்டம், கந்தரோடையின் தொல்லியல் ஆய்வுகளின் முடிவுகள் இதனை உறுதிப்படுத்த உதவுகின்றதெனலாம்.

**உசாத்துணை நூல்கள்**

Begley, V. (1973). ‘ *Proto – historical material from Sri Lanka (Ceylon) and Indian Contacts' Ecological Backgrounds of South Asian Pre – history'*. (ed)., Kennedy, K.A.R and Possehl, G.L. New Orieans, 191 – 196.

Indrapala, K. (1970). The Origin of the Tamil Vanni Chieftaincies of Ceylon. CJH, I, No.2, pp.from 109.

Mahavamsa. (1950). (Tr) Geiger, W, Colombo.

Rasanayakam, C. (1926). Ancient Jaffna. Madras.

Seneviratne, S. (1984). The Archaeology of the Megalithic Black and Red Ware Complex in Sri Lanka in Ancient Ceylon. Sri Lanka: Journal of the Archaeological Survey of Sri Lanka, 237 – 307.

Paranavitana, S. (1962). The Arya kingdom of North Ceylon. J C B R A S, VII, 2.

Mendis, G.C. (1965). The Vijaya legend. Colombo: Paranavitana Felicitation Volume, (ed) Jeyawicrama, M.A, 263 – 279.

யாழ்ப்பாணவைபவமாலை. (1995). குல சபாநாதன், கொழும்பு, இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்.


ISSN (Print): 2448-9204

ஞானப்பிரகாசர், சுவாமி. (1928). யாழ்ப்பாண வைபவ விமர்சனம். அச்சுவேலி.

திரிகோணாசல புராணம். (1909). (பதிப்பு), சண்முக இரத்தின ஐயர், யாழ்ப்பாணம்.

வையாபாடல். (1980). (பதிப்பு), நடராசா.க. செ, கொழும்பு.


கோணேசர் கல்வெட்டு. (1915). (பதிப்பு), வைத்திலிங்க தேசிகர். பு.பொ. யாழ்ப்பாணம்.


மட்டக்களப்பு மான்மியம். (1962). (பதிப்பு), நடராசா, F . X. C., கொழும்பு.

சிற்றம்பலம், சி.க. (1993). யாழ்ப்பாணத் தொண்மை வரலாறு. யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வெளியீடு.


இந்திரபாலா,கா. (2006). இலங்கையில் தமிழர் ஒர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு. சென்னை: குமரன் புத்தக இல்லம்.














ISSN (Print): 2448-9204



கீரிமுக நகுல முனிவர்

விஜயன், குவேனி கதையினை பிரதிபலிக்கும் ஓவியங்கள்






ISSN (Print): 2448-9204